ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2349 - 2023 සැප්තැම්බර් මස 08 වැනි සිකුරාදා 2023.09.08
*2349 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 672 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | 668 |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - | | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.**- சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2023, ஓகத்து 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

825 - B82494 - 5403 (2023/09)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## நொச்சியாகம பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக வெளியிடுதல்


*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் பிரதேச சபைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நொச்சியாகம பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 76-2021, யூலை பிரகாரம் சபையினால் நிறை வேற்றப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையினை குறிப்பிட்ட சட்டத்தின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அநுராதபுரம் பரிபாலன மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றும் எல்.எச்.வீ. இரோசனி ஆகிய என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எல். எச். வீ. இரோசனி,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
அநுராதபுரம்.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (01) ஆம் உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நொச்சியாகம பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள இங்கு கீழ் அட்டவணை இணைக்கப்பட்டுள்ள வரைபடம் மற்றும் அத்துடன் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ளதுமான, பிரதேசத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடுவதற்கும், இந்த பிரேரணையினை அநுராதபுரம் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும் என்றும் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்களினதும் மற்றும் அசையா சொத்து வகைகளினதும் வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்வதற்கும், அப்படிச் செய்யப்பட்ட மதிப்பீட்டை வருடாந்த பெறுமதியின் மீது மதிப்பீட்டு வரியை நியமிப்பதற்கும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இணைவு கட்டளைகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக் கப்பட வேண்டிய மேற் குறிப்பிட்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வட மத்திய மாகாணத்தின் மாகாண உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்று நொச்சியாகம பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*




| இடம் | பெயர் |
|---|---|
| A | தபால் அலுவலகம் |
| B | பஸ் தரிப்பு |
| C | சமுல வைத்தியசாலை |
| D | நொச்சியாகம பொலிஸ் நிலையம் |
| E | கொமர்சியல் வங்கி |
| F | சனச அபிவிருத்தி வங்கி |
| G | பரசந்த டிரேடர்ஸ் |
| H | சிபெட்கோ நிரப்பு நிலையம் |
| I | சமனல ஹோட்டல் |
| J | லோங் டெக்ஸ் தனியார் |
| K | பிரதேச செயலகம் நொச்சியாகம |

| இல | X | Y |
|---|---|---|
| 1 | 138862 | 340014 |
| 2 | 138646 | 339910 |
| 3 | 138328 | 339759 |
| 4 | 137910 | 339609 |
| 5 | 136764 | 339163 |
| 6 | 137113 | 339413 |
| 7 | 137680 | 339684 |
| 8 | 137921 | 339846 |
| 9 | 138453 | 330017 |
| 10 | 138806 | 340136 |

என்னால் மொழிபெயர்க்கப்பட்டது

**அகலவத்தை பிரதேச சபை**

*1975 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க, வீதிகளுக்கு பெயர்சூட்டுதல், நினைவுச்சின்னம் அமைத்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பான சட்டத்தின் கீழ் வீதிகளுக்கு பெயர் சூட்டுதல்*

*அகலவத்தை பிரதேச சபை அங்கீகாரத்தின் பிரகாரம் வீதிகளின் பெயர்மாற்றம் செய்தல் கீழ்க் காணும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க, வீதிகளுக்கு பெயர்சூட்டுதல், நினைவுச்சின்னம் அமைத்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மேல் மாகாணத்தில் கௌரவ முதலமைச்சரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்படி கீழே உப அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பாதைகளுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

*டபிள்யு. ஏ. அஜித் கித்சிரி,*
*அகலவத்தை பிரதேச சபையின் செயலாளரும்,*
*சபையின் அதிகாரங்களை, வேலைகளை மற்றும் கடமைகளை*
*அமுல்படுத்தும் அதிகாரியும்.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அகலவத்தை,*
*2023, ஓகத்து 24.*

**அகலவத்தை பிரதேச சபை வீதிகளின் பட்டியல் - 2023**

| *வீதியின் பழைய பெயர்* | *பயன்படுத்தப்பட வேண்டிய பெயர்* | *வீதி ஆரம்பம்* | *வீதியின் முடிவு* |
|---|---|---|---|
| - | சணச மாவத்தை | பொல்கம்பல கும்பதுவ பிரதான பாதையில் குறுந்துவத்த பிரதேசத்தில் இருந்து | சணச கட்டிடத்திற்கு சுற்றிச் சென்று. |
| பொல்வத்தவெல சாதகொட பாதையில் | டி.ஈ. கொத்தலாவல மாவத்தை | பொல்வத்தவெல ரத்மலே பாதையில் திரு. அனுர கொத்தலாவல அவர்களின் இல்லத்திற்கு அருகில் இருந்து | சாதகொட சந்தி |

*09-107*

# நானாவித அறிவித்தல்கள்

**கடுவளை மாநகர சபை**

நானாவித கட்டணங்களை விதித்தல் - 2023

2307 ஆம் இலக்க நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய IV (ஆ) ஆம் பகுதி உள்ளூராட்சி வர்த்தமானி அறிவித்தலின் நானாவித கட்டணங்கள் தலைப்பின் கீழ் உப இலக்கம் LVI கீழ் குறிப்பிட்டுள்ள விடயங்கள் மற்றும் அறிவித்தல்களையும், நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கான கட்டணங்களை அறவிடுவது தொடர்பான புதிய முன்மொழிவுகளையும் பொது மக்களின் அறிவித்தலுக்காக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

தில்ருசஷி கமகே,
நகரசபை ஆணையாளர் மற்றும்
அதிகாரங்கள், கடமைகள் மற்றும்
பணிகளை செயல்முறைப்படுத்தும்
உத்தியோகத்தர்.

மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2023, ஓகத்து 16.

**கடுவளை மாநகர சபை**

நானாவித கட்டணங்களை விதித்தல் - 2023

கடுவளை மாநகர சபையினால் 2023, ஓகத்து மாதம் 04 ஆம் திகதி நடாத்தப்பட்ட நிருவாக சபைக் கூட்டத்தில் விடய இல. 2023/01/ප தீர்மானம் இல. 327 மற்றும் 2023/01/ප தீர்மானம் இல. 348 இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டதாக பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

தில்ருசஷி கமகே.
நகரசபை ஆணையாளர் மற்றும்
அதிகாரங்கள், கடமைகள் மற்றும்
பணிகளை
செயல்முறைப்படுத்தும்
உத்தியோகத்தர்.

மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2023, ஓகத்து 16.

**2023 ஆம் ஆண்டுக்கு நானாவித கட்டணங்களை விதித்தல்**

| | சேவைகள் | 2023 ஆம் ஆண்டுக்கான கட்டணங்கள் |
|---|---|---|
| 01 | கடுவலை பேருந்துத் தரிப்பிடம், பொதுச் சந்தை மற்றும் கடுவலை வாராந்த சந்தை நலன்புரி நடவடிக்கைகள், கழிப்பறைப் பாவனை | |
| | (ஆ) ஒரு நபருக்கு | 25.00 |
| | (ஆ) நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கான வைப்புப் பணம் | 05.00 |

| | சேவைகள் | 2023 ஆம் ஆண்டிற்கான கட்டணங்கள் |
|---|---|---|
| LVI | கூட்டுப்பசளை | |
| | 1. பொதி செய்யப்படாதது - 01 கிலோ கிராமுக்கு | 10.00 |
| | 2. பொதியிடப்பட்டது - 01 கிலோ கிராம் (01 பொதிக்கு) | 40.00 |
| | 3. பொதியிடப்பட்டது - 05 கிலோ கிராம் (01 பொதிக்கு) | 100.00 |
| | 4. பொதியிடப்பட்டது - 10 கிலோ கிராம் (01 பொதிக்கு) | 200.00 |
| | 5. பொதியிடப்பட்டது - 20 கிலோ கிராம் (01 பொதிக்கு) | 400.00 |
| | 6. பொதியிடப்பட்டது - 50 கிலோ கிராம் (01 பொதிக்கு) | 1,000.00 |
| | 7. பொதியிடப்பட்ட உர விற்பனைக்கு (01 கிலோ கிராமுக்கு) | 20.00 |

09-154

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.